## எலஹர பிரதேச சபை

## பொலன்னறுவை மாவட்டம்

---

1. நிதிக் கூற்றுக்கள்

---

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மே 10 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 செப்டம்பர் 24 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 30 திகதி சபையின் செயலாளரிற்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---

நிதிக் கூற்றுக்களானவை எலஹர பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதிய முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு நிதி நிலைமை பற்றிய கூற்றில் மீளாய்வாண்டிற்கான நிர்மாண வேலை கடன்பட்டோர் ரூபா 18,017,398 தொகை என குறிப்பிட்டிருந்த போதும், பதிவேடுகளின் பிரகாரம் அம்மீதி ரூபா 19,333,066 ஆக காணப்பட்டமையினால் நிர்மாண வேலை கடன்பட்டோர் ரூபா 1,915,668 இனால் குறைவாகக் காணப்பட்டிருந்தது.

(ஆ) நூலக கட்டடம், நோய் ஆய்வு நிலையம் மற்றும் கருத்தரங்கு மண்டபம் நிர்மாணிப்பதற்காக 2010 அக்டோபர் 10 திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த சேமிப்புக் கணக்கில் ரூபா 179,200 தொகையினை நிதிக் கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது நிர்மாண வேலை கடன் கொடுத்தோர்கள் ரூபா 20,300,065 தொகை ஒன்று நிதி நிலைமை பற்றிய கூற்றில் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீர் நுகர்வோரிடம் அறவிடப்பட வேண்டிய நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 202,794 நிதி நிலைமை பற்றிய கூற்றில் கடன் பட்டோர் பெறுமதியில் இருந்து கைவிடப்பட்டுள்ளது.

(உ) மீளாய்வாண்டின் போது 04 ஆம் இலக்க நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காணப்படும் சேவைக்கான கட்டண வருமானம் ரூபா 3,008,063 தொகை எனினும் வருமானச் செலவு கணக்கின் பிரகாரம் அது ரூபா 2,830,322 என குறிப்பிடப்பட்டுள்ளமையால் வருமானச் செலவுக் கணக்கில் நீர்க் கட்டண வருமானம் ரூபா 177,741 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,988,820 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 1,898,265 இற்கான தொகை 2012 ஆண்டு முதல் சபையின் புதிய கட்டட நிர்மாண வேலைக்கான சபையின் பங்களிப்புத் தொகை என செலுத்த வேண்டிய தொகை ஒன்றென அவதானிக்கப்பட்டது.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 95,016,064 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

1.3.3 இணக்கமின்மைகள்

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2009 பெப்ரவரி 20 ஆந் திகதி இலக்கம் 1589/30 கொண்ட அரசாங்க சேவை ஆணைக்குழு செயலாளரின் அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட செயற்பாட்டு நடைமுறை விதி அத்தியாயம் iii பிரிவு 23(1) | செயலாளர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக உள்ளூராட்சி ஆணையாளரினால் 2013 ஜூன் 03 திகதி முதல் பதில் கடமை செயலாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதும், அந்த நியமனத்திற்காக வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் குறிப்பிட்ட அங்கிகாரத்தை பெற்றிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| நி.பி. 571 | ரூபா 260,000 பெறுமதியான 02 வருட காலத்தை விஞ்சிய திருப்பி செலுத்த வேண்டிய 52 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 திகதிய 1980/46 கொண்ட சுற்றுநிருபம் | சபைக்கு சொந்தமான 50 கடைகளுக்காக குறைந்த பட்சம் 05 வருடங்களுக்கு ஒரு முறையேனும் வாடகையை திருத்த வேண்டும் எனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை. |

1.3.4 பெற வேண்டிய கணக்குகள்

-------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 24,661,407 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 153,774 இற்கான தொகையொன்று 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் நிலுவை வருமானம் என நிதி நிலைமைக் கூற்றில் தொடர்ந்தும் வெளிப்படுத்தப்படும் இனங்காணப்படாத மீதியொன்றாக காட்டப்பட்டிருந்தது.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 437,239 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 668,845 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

------------------------------

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

------------------------------------------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரி | 1,065 | 650 | 550 |
| (ii) | வாடகை | 10,975 | 2,192 | 557 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 490 | 68 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 37,284 | 23,384 | 35,232 |

2.2.2 வீதவரி

-----------

55 வரி செலுத்துவோரினால் 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 576,571 இற்கான நிலுவை வீதவரியினை அறவீடு செய்வதற்காக சபை போதிய கவனம் ஒன்று செலுத்தியிருக்கவில்லை.

2.2.3 கடை வாடகை

-----------------------

பகமூண, எலஹர 13 கடைகளில் இருந்து 01 வருடத்தை விட மிகைத்த காலம் நிலுவையாகக் காணப்படும் ரூபா 219,182 தொகை ஒன்றினை அறவீடு செய்வதற்காக சபையினால் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,702,975 உம், முத்திரை கட்டணம் ரூபா 666,500 உம் ஆகும்.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

--------------------------------------------------------------------------------------------------

சபைக்கு சொந்தமான ரூபா 1,707,175 இற்கான கப் வண்டி ஒன்று, அரிசி மா உற்பத்தி தொகுதி மற்றும் அக் கட்டடம் 5 – 7 வருடங்கள் இடைப்பட்ட காலம் முதல் பயன்படுத்தாது காணப்பட்டது.

3.2 ஒப்பந்த நிருவாகம்

----------------------------

(அ) பெருந்தெருக்கள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் கொங்கிரீட் அச்சுக் கற்கள் பரப்பி பாதையை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் ஜயசிரிபுரபிடிய பாதை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் சமூர்தி அபிவிருத்தி சங்கம் ஒன்றிற்கு 2014 ஜூன் 15 திகதி ரூபா 498,569 இற்கான தொகைக்கு உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒப்பந்தக்காரர் அந்த நிர்மாண வேலையை மேற்கொண்டிருக்கவில்லை. கணக்காய்வு திகதியாகிய 2015 ஜூன் 20 திகதி வரை சபை இது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2013 மற்றும் 2014 ஆண்டுகளின் போது மேற் கொள்ளப்பட்ட ரூபா 7,960,164 தொகை பெறுமதியான மகநெகும கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 16 பாதைகளை ஒழுங்குபடுத்தும் ஒப்பந்த வேலைகளின் இறுதி கொடுப்பனவின் போது குறிப்பிட்ட ஒப்பந்தக்காரருக்கு நூற்றிற்கு 10 தடுத்து வைக்காமல் முழுத்தொகையும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட காலப் பகுதியில் அந்த நிர்மாண வேலை உரிய நிலையில் காணப்பட்டது என தொழில்நுட்ப அலுவலரின் சான்றிதழ் பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

3.3 அகக் கணக்காய்வு

-----------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபையில் அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் உள்ளுராட்சி திணைக்களத்தினாலும் போதியளவு கணக்காய்வு ஒன்று பிரதேச சபையில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம